**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம்.**
**முன்னிலை: திரு. R. கைலாஷ், B.A., B.L.,**
**நீதித்துறை நடுவர்,**
**சீர்காழி.**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30ஆம் நாள் வியாழக்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.310/2025
CNR.NO.TNMY08-003704-2025

| | |
|---|---|
| குற்றமுறையீட்டாளர் : | அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>சீர்காழி காவல் நிலையம்,<br>மயிலாடுதுறை மாவட்டம்,<br>குற்ற எண். 648/2025 |
| /எதிராக/ | |
| குற்றம்சாட்டப்பட்டவர்: | சிவஞானம், 48/25, த/பெ. தர்மலிங்கம், காந்தி நகர், திருமுல்லைவாசல், சீர்காழி. |
| குற்றச்சாட்டு | பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 296(b), 118(1), 351(3) |
| குற்றம் நிகழ்ந்த நாள் | 26.09.2025 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 27.09.2025 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | 27.09.2025 |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 30.09.2025 |
| பாரதிய நியாய சன்ஹிதா 308(2) –ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து எதிரியிடம் கேட்கப்பட்ட நாள் | 26.03.2026 |
| விசாரணை தொடங்கிய நாள் | 18.11.2025 |
| விசாரணை முடிவடைந்த நாள் | 30.04.2026 |
| BNSS 359–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விபரம் | Crlmp.No.436/2026, Dismissed |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட தேதிகள் | (see below) |
| BNSS பிரிவு 351(1)(b)–ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 30.04.2026 |

| | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி.1 | 18.11.2025 | 18.11.2025 |
| அரசு தரப்பு சாட்சி.2 | 18.11.2025 | 18.11.2025 |
| அரசு தரப்பு சாட்சி.3 | 27.04.2026 | 27.04.2026 |



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.04.30 21:40:42 +0530

| | |
|---|---|
| தலைமறைவு எதிரி குறித்த விபரம் | இல்லை |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விபரம் | இல்லை |
| தீர்மானம் | எதிரி பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு 296(b), 118(1), 351(3) ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானம் |
| முடிவு | முடிவில் அரசு தரப்பில், முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகளின் வாயிலாக எதிரியின் செயல் பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 296(b), 118(1), 351(3) ன் கீழ் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரிகளை மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 271(1) பிரிவின் படி எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தால் கடந்த 01.11.2025 தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக இறுதியாக 30.04.2026 ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது, குற்ற முறையீட்டாளர் தரப்பில் உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–II திருமதி. K. நிவேதா அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. வெங்கடேசன் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இன்று நீதிமன்றம் வழங்கிடும்.

**<u>தீர்ப்புரை</u>**

1. இவ்வழக்கானது புகார்தாரரும்/சாட்சி–1ம் ஆன சரஸ்வதி என்பவர் குடிபோதைக்கு அடிமையான அவரது கணவரான எதிரி சிவஞானத்திடம் கடந்த 26.09.2025ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு குடும்ப செலவிற்காக பணம் கேட்க, அதில் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு புகார்தாரர் கோவித்துக்கொண்டு அவரது அம்மா வீட்டிற்கு செல்ல எத்தனிக்க, அப்போது எதிரி அவரை பார்த்து 'குச்சிக்காரி தேவிடியா எங்கடி போற?, ஆம்பள துணை இல்லாம தனியா வாழ முடியுமா உன்னால?' என்று அசிங்கமாக திட்டி வீட்டு வாசலில் கிடந்த இரும்பு கம்பியை எடுத்து சாட்சி–1ன் இடது பக்க நெற்றியில் அடித்து கீழே தள்ளி, 'உன்னை இதாலேயே அடிச்சு கொலை செய்திடுவேன்' என்று சொல்லி கொலைமிரட்டல் விடுத்தது சம்பந்தமாக, மேற்படி எதிரியின் செயல் பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 296(b), 118(1), 351(3)ன் கீழ் தண்டிக்கத்தக்கது என்று கருதி சீர்காழி காவல் நிலைய சிறப்பு காவல் உதவி



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.04.30 21:40:49 +0530

ஆய்வாளர் அவர்கள் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 193(3)(i)ன் கீழ் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்கு ஆகும்.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் எதிரிக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால் வழக்கானது இந்நீதிமன்றத்தால் கடந்த 01.11.2025ம் தேதி கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் 26.03.2026ம் தேதி குற்றவியல் நடைமுறை சட்டப் பிரிவு 230ன் கீழ் வழக்கு ஆவணங்களின் நகல் கட்டணமின்றி வழங்கப்பட்டது. இருதரப்பு வாதங்களையும் கேட்டு கடந்த 26.03.2026ம் தேதி எதிரியின் செயல் பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 296(b), 118(1), 351(3)ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து, குற்றச்சாட்டின் சாராம்சங்கள் குறித்து எதிரியிடம் விளக்கி கேட்டபோது, 'எதிரி பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை வேண்டுமென்றும்' கூறினார். எனவே, இவ்வழக்கு சாட்சிகளின் விசாரணைக்காக உத்தரவிடப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் அரசு தரப்பில் அரசு தரப்பு சாட்சி.1 முதல் 3 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டும், அரசு தரப்பு சான்றாவணம்.1 முதல் 6 குறியீடு செய்யப்பட்டது. பட்டியல் சாட்சிகள் 2, 4 முதல் 8 வரையிலானவர்களை உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் அளித்த பரிந்துரையின் அடிப்படையில் விசாரிக்கப்படாமல் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். எவ்வித ஆவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

4. இவ்வழக்கில் கடந்த 30.04.2026ம் தேதி அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சாட்சியம் குறித்து, அவற்றை கேள்விகளாக தொகுத்து பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 351(1)(b) பிரிவின் கீழ் வினவியபோது, அதனை மறுத்து எதிரி 'பொய் சாட்சி, பொய் வழக்கு' என்றும், தனது தரப்பில் விசாரிக்க வாய்மொழி சாட்சி இல்லை என்றும் கூறினார். ஆகவே, எதிரி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது. இருதரப்பு சாட்சிய விசாரணைகள் முடிக்கப்பட்டதால் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

5. அரசு தரப்பில் அரசு தரப்பு சாட்சி.2ன் சாட்சியத்தின் மூலமாகவும், குறியீடு செய்யப்பட்டுள்ள அரசு தரப்பு சான்றாவணம்.2 முதல் 6 ஆவணங்கள் வாயிலாகவும், அரசு தரப்பு வழக்கை எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்றும், அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

6. இவ்வழக்கின் புகார்தாரர் அரசு தரப்பு சாட்சி.1, கண்ணுற்ற சாட்சியான அரசு தரப்பு சாட்சி-2 பிறழ் சாட்சிகளாக மாறி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்றும், அரசு தரப்பு சாட்சி.3ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரி



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.04.30 21:40:56 +0530

குற்றவாளி என்று முடிவு செய்ய முடியாது என்றும், எனவே, எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை வழக்கில் இருந்து விடுதலை செய்து உத்தரவிட வேண்டுமாறு வாதிடப்பட்டது.

7. இவ்வழக்கில் தீர்மானிக்கபட வேண்டிய பிரச்சனைகள்

i) இவ்வழக்கில் எதிரி மீதான பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 296(b), 118(1), 351(3)ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**8.தீர்வு:–**

8.1) இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, இவ்வழக்கின் புகார்தாரரான அரசு தரப்பு சாட்சி.1 தனது புகார் வாக்குமூலத்தில், தனக்கு திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளதாகவும், எதிரி குடிப்பழக்கம் உள்ளவர் என்றும், எப்போதும் குடித்துவிட்டு பிரச்சனை செய்து தன்னை அடிப்பார் என்றும், வீட்டு செலவிற்கு பணம் கொடுக்க மாட்டார் என்றும், விவசாய நில இன்சூரன்ஸ் பணத்தையும் எதிரி குடித்து செலவழித்ததாகவும், கடந்த 26.09.2025ந் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் தான் தன் கணவரிடம் குடும்ப செலவுக்கு பணத்தை கேட்டதில் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு எதிரி தன்னை காமகுரோதமான வார்த்தைகளால் திட்டி, இரும்பு கம்பியால் நெற்றியில் அடித்து கீழே தள்ளி, கம்பியை காட்டி மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டுள்ளபோதிலும், தனது சாட்சியத்தில், கடந்த வருடம் ஒரு நாள் காலை 10.00 மணியளவில் தங்கள் தெருவில் நின்று கொண்டிருந்தபோது அங்கு சிலர் கூட்டமாக சண்டையிட்டு கொண்டு இருந்ததாகவும், கூட்டத்தை வேடிக்கை பார்க்க அவர் சென்றபோது யாரோ சிலர் அவரை தகாத வார்த்தைகளால் திட்டி, இரும்பு கம்பியால் பின்னால் இருந்து தாக்கியதாகவும், யார் அவரை தாக்கினார்கள் என்று அவரால் பார்க்க இயலவில்லை, எதிரிக்கும் அவருக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்ததால் எதிரி தான் அவரை தாக்கியிருப்பார் என நினைத்து மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டதாகவும் சொல்லி புகார் வாக்குமூலத்தில் உள்ள தன்னுடைய கையெழுத்தை மட்டும் ஒப்புக்கொண்டு, அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியமளித்து பிறழ் சாட்சியாகியுள்ளார். எனவே இவரது சாட்சியத்தின் மூலம் எதிரியை குற்றவாளியாக கருத முடியாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.04.30 21:41:05 +0530

8.2) இவ்வழக்கு கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில், இந்த வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சொல்லி அரசு அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியமளித்து பிறழ்சாட்சியாக மாறியுள்ளார் .

8.3) இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சார்பாக சாட்சியமளித்த சீர்காழி காவல்நிலையத்தின் தற்போதைய உதவி ஆய்வாளரான அரசு தரப்பு சாட்சி.3 தனது சாட்சியத்தில், கடந்த 27.09.2025ம் தலைமை காவலர் வெங்கடேஷ் நிலைய பொறுப்பில் இருந்தபோது சீர்காழி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த சரசுவதி என்பவரை விசாரணை செய்து பெற்ற புகார் வாக்குமூலம் பெற்றார் என்றும், அதன் அடிப்படையில் சீர்காழி காவல் நிலைய குற்ற எண் 648/2025 BNS பிரிவுகள் 296(b), 118(1), 351(3)ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது பற்றியும், கடந்த 27.09.2025ம் தேதி காலை 18.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது பற்றியும், சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தது பற்றியும், வழக்கின் எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தது பற்றியும், அ.சா.1க்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரணை செய்து காயச்சான்று பெற்றது பற்றியும், இறுதியாக இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது பற்றி சாட்சியமளித்திருப்பினும், இவ்வழக்கின் புகார்தாரரும் எதிரியும் சமரசம் செய்து கொண்டதாக கூறி, பிரிவு 359 BNSSன் கீழ் மனு தாக்கல் செய்து அம்மனு 06.04.2026 அன்று Crlmp No.436/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு அன்றே தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையிலும், புகார்தாரர் மற்றும் கண்ணுற்ற சாட்சி ஆகியோர் பிறழ்சாட்சியாகியுள்ள நிலையிலும், அரசு தரப்பு சாட்சி.3 ஆன காவல்துறை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக கருதுவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. முடிவில் அரசு தரப்பில், முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகளின் வாயிலாக எதிரியின் செயல் பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 296(b), 118(1), 351(3) ன் கீழ் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரியை மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 271(1) பிரிவின் படி எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.04.30 21:41:47 +0530

10. எதிரி இந்நீதிமன்றத்திற்கு எழுதிக் கொடுத்த பிணை பத்திரங்கள் வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின்பு தானாக இரத்தாக வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் அதுகுறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30 ஆம் நாள் ஆகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.04.30 21:41:18 +0530

நீதித்துறை நடுவர்,
சீர்காழி.

1. அரசுத் தரப்பு சாட்சிகள்:

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி.1 | திரு. சரசுவதி | புகார்தாரர் |
| அரசு தரப்பு சாட்சி.2 | திரு . கலைமாறன் | தற்போதைய உதவி ஆய்வாளர் |
| அரசு தரப்பு சாட்சி.3 | திரு.வீரராகவன் | தற்போதைய உதவி ஆய்வாளர் |

2. அரசு தரப்பு சான்றாவணங்கள்:

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சான்றாவணம்–1/ அரசு தரப்பு சாட்சி.1 | 27.09.2025 | புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து |
| அரசு தரப்பு சான்றாவணம்–2/ அரசு தரப்பு சாட்சி.3 | 27.09.2025 | புகார் வாக்குமூலம் |
| அரசு தரப்பு சான்றாவணம்–3/ அரசு தரப்பு சாட்சி.3 | 27.09.2025 | முதல் தகவல் அறிக்கை |
| அரசு தரப்பு சான்றாவணம்–4/ அரசு தரப்பு சாட்சி.3 | 27.09.2025 | மாதிரி வரைபடம் |
| அரசு தரப்பு சான்றாவணம்–5/ அரசு தரப்பு சாட்சி.3 | 27.09.2025 | பார்வை மகஜர் |
| அரசு தரப்பு சான்றாவணம்–6/ அரசு தரப்பு சாட்சி.3 | 26.09.2025 | காயச்சான்று |

3. அரசு தரப்பு சான்று பொருட்கள்:  இல்லை.

4. எதிரி   தரப்பு சாட்சிகள்: இல்லை.

5. எதிரி    தரப்பு சான்றாவணங்கள் மற்றும் சான்று  பொருள்:  இல்லை

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.04.30 21:41:26 +0530

நீதித்துறை நடுவர்,
சீர்காழி.

குறிப்பு
1.தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2.இவ்வழக்கு விசாரணையின்போது எதிரி நீதிமன்ற பிணையில் இருந்து வருகின்றார்.
3.இவ்வழக்கில் சாட்சிகள் 3 முறைக்கு மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அழைக்கப்படவில்லை.

நகல்
1)மாண்பமை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், மயிலாடுதுறை அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.